வழங்கியுள்ளார்கள். எனவே, இந்தச் சட்டமன்றக் கூட்டத்தொடர் முடிவுற்றதும், நாங்கள் புதுடில்லி சென்று, நெசவாளர்கள் விரும்புகின்ற விதத்தில் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு விரைந்து நடவடிக்கை மேற்கொள்வோம் என்பதனை இம்மாமன்றத்திற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. கவன ஈர்ப்பு

(அ) கீழடியில் அகழாய்வின்போது கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களை வைத்து அருங்காட்சியகம் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. சோ. மாரியப்பன் கென்னடி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. சோ. மாரியப்பன் கென்னடி அவர்கள்.

திரு. சோ. மாரியப்பன் கென்னடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகாளும் தமிழுக்கு ஏற்றம் தரவே, அவதாரம் எடுத்து வந்த அரசியல் பூங்காற்று, எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டை திக்கெட்டும் புகழ் மணக்கும் திருவிழாவாக்கி, சங்கத் தமிழின் பெருமையைப் பரப்பிய தங்கத் தாரகையின் புகழ் வழியில், தாய் அரசாளும் காலம்தான் தமிழ் செழித்து வாழும் காலம் என்று அம்மாவின் பொற்பாதம் வணங்கி, நல்லாட்சி நடத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும் வணங்கி, எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், மானாமதுரை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட "கீழடியில் அகழாய்வின்போது கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களை வைத்து அருங்காட்சியகம் அமைக்க வேண்டியதன் அவசியம்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[2017 ஜூலை 14

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

மத்திய தொல்லியல் துறையானது, சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், கீழடி கிராமத்தில் 2014–2015–ல் பிப்ரவரி 2014 முதல் செப்டம்பர் 2014 வரை மற்றும் 2015–2016–ல் ஜனவரி 2016 முதல் ஆகஸ்ட் 2016 வரை இரண்டாண்டுகளில் 2 ஏக்கர் பரப்பளவில் அகழாய்வு மேற்கொண்டது. இவ்வகழாய்வில், 2,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட கட்டடப் பகுதிகள், கழிவுநீர்க் குழாய்கள், சுடுமண்ணால் ஆன உறைகிணறு மற்றும் அக்காலத்திய பானைகள், பானை ஓடுகள், கண்ணாடி மணிகள் ஆகியவை வெளிப்பட்டுள்ளன. 2014–2015 ஆம் ஆண்டில் 1,800 தொல்பொருட்களும், 2015–2016–ல் மேலும் 4,125 தொல்பொருட்களும் கண்டெடுக்கப்பட்டன.

இந்த அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட பொருட்களைக் கொண்டு கள அருங்காட்சியகம் ஒன்று அமைப்பதற்கு கீழடி கிராமத்தில் இரண்டு ஏக்கர் நிலம் ஒதுக்கித் தருமாறு பெங்களூருவில் உள்ள மத்திய தொல்லியல் துறையின் தொல்லியல் கண்காணிப்பாளர் அவர்கள் தமது 30–8–2016 நாளிட்ட கடிதத்தில் தமிழக அரசை கேட்டுக்கொண்டார்கள்.

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 28–9–2016 நாளிட்ட செயலாணைகள் ந.க.எண் சி4/17290/2016 மூலம் கீழடியில் கள அருங்காட்சியகம் ஒன்று மத்திய அரசால் அமைத்திட ஏதுவாக, 72 சென்ட் நிலம் ஒதுக்கி உத்தரவிடப்பட்டது.

இவ்வகழாய்வில் கிடைக்கப்பெற்ற தொல்பொருட்களை பெங்களூருவிற்கு எடுத்துச் செல்வது தொடர்பாக சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் சென்னையைச் சேர்ந்த கனிமொழி மதி அவர்களால் நீதிப் பேராணை எண் 19005/2016–ல், வழக்கு தொடுக்கப்பட்டது. சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை, கீழடி அகழாய்வில் கிடைக்கப்பெற்ற தொல்பொருட்களை மைசூருக்கு எடுத்துச் செல்ல தடை விதித்தது. இருப்பினும், கிடைக்கப்பெற்ற

தொல்பொருட்களில் முக்கியமானவற்றின் காலம் கண்டறிவதற்கு கார்பன் சோதனை மேற்கொள்ள அனுமதி அளித்தது. மேலும் அகழாய்வு செய்யப்பட்ட குழிகளை மூடுவதற்கும் அனுமதி வழங்கியது.

மேலும், இவ்வழக்கு 15–11–2016 அன்று விசாரணைக்கு வந்தபோது அகழாய்வில் கிடைக்கப்பெற்ற அரிய பொருட்களை இரசாயன முறைப்படி ஆய்வு செய்திட பெங்களூருவிற்கு எடுத்துச் செல்லாமல் சென்னைக்குக் கொணர்ந்து ஆய்வு செய்திடவும், மனுதாரர் தரப்பில் கள அருங்காட்சியகம் அமைக்க 72 சென்ட் நிலம் ஒதுக்கி இருப்பது போதாது என்றும், கூடுதலாக நிலம் ஒதுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது. அகழாய்வில் கிடைக்கப்பெற்ற பொருட்கள் மத்திய தொல்லியல் துறையினால் தற்காலிக கூடாரம் அமைத்து பாதுகாக்கப்பட்டு வருவதினை உறுதியான கட்டடத்தில் பாதுகாத்திட தெரிவிக்கப்பட்டது. கூடுதல் அரசு தலைமை வழக்குரைஞர் அவர்களால் அரசினை அணுகி கூடுதலாக நிலம் ஒதுக்கீடு செய்திட ஆவன செய்வதாக தெரிவிக்கப்பட்டது.

மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு துறை/நிறுவனமும் மேற்கொள்ளும் அகழாய்வுக்கு மத்திய தொல்லியல் துறையின்கீழ் உள்ள மத்திய தொல்லியல் அறிவுரைக் குழுமத்தினால் (Central Advisory Board of Archaeology) அனுமதி வழங்கப்படுகிறது. 2017–2018–ல் கீழடியில் மூன்றாம் கட்ட அகழாய்வுக்கு (Central Advisory Board of Archaeology) மத்திய தொல்லியல் அறிவுரைக் குழுமத்தினால் அனுமதி வழங்கப்பட்டு அகழாய்வுப் பணிகள் மத்திய தொல்லியல் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்படி மாவட்ட ஆட்சியரால் ஒதுக்கீடு செய்யப்பட்ட 72 சென்ட் நிலம் போதுமானதாக இல்லை என மத்திய தொல்லியல் துறையினரால் தெரிவிக்கப்பட்டதால், சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அவர்களால் 24–6–2017 நாளிட்ட செயலாணைகள் ந.க. எண் சி4/17300/2016–ல் சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், கொந்தகை உள்வட்டம், கொந்தகை வருவாய் கிராமம் புல எண் 1/2 விஸ்தீரணம் 3.82.0 ஹெக்டேர் மந்தை புறம்போக்கு என கிராம நிலத்தில் புதியதாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ள புல எண் 1/3 விஸ்தீரணம் 0.81.0 ஏர்ஸ் (சுமார் 2 ஏக்கர்) நிலத்தில் அருங்காட்சியகம் அமைக்க மத்திய தொல்லியல் துறைக்கு, முன் நுழைவு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்விவரம் மத்திய

தொல்லியல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டு அவர்களது கேட்பு விண்ணப்பத்தினையும் மேற்படி நிலத்தினையும் பெற்றுக் கொள்வதற்கான ஏற்புச் சான்றினையும் வழங்கிட மத்திய தொல்லியல் துறை கேட்டுக் கொள்ளப்பட்டது.

மேலும் 2017–2018 ஆம் ஆண்டுக்கான பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையின்போது "சிந்து சமவெளி நாகரிகம் உள்ளிட்ட பழம்பெரும் நாகரிகங்கள் குறித்த சிறப்பு நூலகம் மற்றும் காட்சிக்கூடம் சிவகங்கை மாவட்டம் கீழடியில் ரூபாய் ஒரு கோடி செலவில் அமைக்கப்படும்" என அறிவிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரியப்பன் கென்னடி, சுருக்கமாகக் கேளுங்கள். ஒரே கேள்விதான்.

நண்பகல் 12–00

திரு. சோ. மாரியப்பன் கென்னடி: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். 'கல்தோன்றி மண் தோன்றா காலத்தே முன்தோன்றிய மூத்தகுடி' எனும் பெருமிதத்தை பொய்யில்லையென நிரூபித்திருக்கிறது கீழடி அகழாய்வு. கீழடியில் நடந்த அகழாய்வில் 102 அகழாய்வுக் குழிகள் தோண்டப்பட்டன. சுமார் 2,500 வருடங்களுக்கு முந்தைய தமிழர் வாழ்வின் நாகரிகத்தின் சாட்சியமாக விளங்குகிற அறிவியல்பூர்வ ஆய்வு இது. திராவிட இயக்கக் கோட்பாடுகளுக்கு வலு சேர்க்கின்ற ஆய்வு. திராவிட நாகரிகமே நகர நாகரிகத்தின் முன்னோடி என்பதை நிரூபிக்கும் வகையில் இந்த அகழாய்வு அமைந்துள்ளது. ஆதலின், தமிழனின் தொன்மையை உலக அரங்கில் கொண்டு செல்ல புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு அந்த இடத்தில் 2 ஏக்கர் நிலம் கொடுத்துள்ளமைக்கும், ரூ.1 கோடி ஒதுக்கியுள்ளமைக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், தமிழக அரசின் சார்பாக அங்கு ஒரு site museum அமைத்தும், மைசூருக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ள பொருட்களைத் தமிழகத்திற்கு கொண்டு வந்து carbon dating–க்கு அனுப்பி அதனுடைய வயதைக் கணக்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹரப்பா, மொகஞ்சதாரோ போல பெரிய அளவில் மிகப் பெரிய ஓர் அகழ்வாராய்ச்சியை அமைத்திட மத்திய அரசை

2017 ஜூலை 14] **[திரு. சோ. மாரியப்பன் கென்னடி]**

வலியுறுத்த வேண்டுமென கேட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.*

***திரு. தங்கம் தென்னரசு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழடி நாகரிகம் ஏறத்தாழ 2,500 ஆண்டுகளுக்கு முற்பட்ட, தமிழர்தம் பண்பாட்டின் பெருமையை விளக்கக்கூடிய ஒரு நாகரிகம். கீழடி அகழாய்வுகளுக்கும், மற்ற அகழாய்வுகளுக்கும் இருக்கக்கூடிய முக்கியமான வித்தியாசம் என்னவென்றால், இதுவரையில் தமிழகத்தில் நடைபெற்றிருக்கக்கூடிய பல்வேறு அகழாய்வுகள் ஈமக் காடுகள் என்று சொல்லக்கூடிய* burial sites–*லே நடந்தன. ஆனால் கீழடியிலே இருக்கக்கூடிய ஆய்வுதான் முதன்முறையாக* human habitations *என்று சொல்லக்கூடிய மக்கள் வாழும் இடத்திலே நடத்தக்கூடிய மிகப் பெரிய ஆய்வு. அந்த ஆய்வின் மூலமாக சில மிக அற்புதமான பொருட்களெல்லாம் கிடைத்திருக்கின்றன. பிராமி பானை ஓடுகள், தமிழருக்கு எழுத்து முறையிலே இருக்கக்கூடிய தொல் வரலாற்றை நிரூபிக்கக்கூடிய பல்வேறு சான்றுகள் அங்கே கிடைத்திருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆனால் அந்த ஆய்வுகளைத் தொடர்ந்து நடத்துவதற்கு மத்திய அரசு முன்வராமல் மூன்றாம் கட்ட ஆய்வை நிறுத்தியபோது, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், கழகத்தின் செயல் தலைவர் அண்ணன் தளபதி அவர்கள், அதுகுறித்து மிகப்பெரிய அழுத்தத்தை மத்திய அரசாங்கத்தின் மத்திய கலாச்சார அமைச்சகத்திற்கு வழங்கினார். பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் அதுகுறித்து எடுத்துச் சொன்னதன் காரணமாக மூன்றாம் கட்ட ஆய்வுக்கு மீண்டும் அனுமதி வழங்கப்பட்டது. ஆனால், அதனை முன்னின்று நடத்தி, அந்தப் பண்பாட்டு ஆய்வினை மிகச் சிறப்பாகச் செய்த, அதிகாரி திரு. அமர்நாத் அவர்களை கௌஹாத்திக்கு மாற்றம் செய்திருக்கக்கூடிய ஒரு நடவடிக்கையை மத்திய அரசாங்கம் எடுத்திருக்கிறது. நான் இந்த அவையின் மூலமாகக் கேட்டுக்கொள்வது, மிகச் சிறப்பான ஆய்வினை மேற்கொண்ட அந்த அலுவலரை மீண்டும் இங்கே கொண்டு வருவதற்கு இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.*

மேலும், தற்போது கொடுக்கப்பட்டிருக்கும் அறிக்கையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 72 சென்ட் நிலத்தை இந்த

அரசு மத்திய தொல்பொருள் துறைக்கு கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த நிலத்தைக் கொடுத்துவிட்டு, அவர்களுக்கு enter upon permission கொடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அருங்காட்சியகத்திற்கு கொந்தகையிலே நிலம் வழங்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கீழடியிலே மீண்டும் ஓர் அருங்காட்சியகத்தை அமைப்போம் என்று நம்முடைய மானியக் கோரிக்கை விவாதத்தின்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, எந்த இடத்தில் இந்த ஆய்வகம் அமையப்போகிறது என்பதையும், தமிழக அரசு மிகச் சிறப்பான வகையில் அந்த அருங்காட்சியகத்தை உருவாக்கி, அங்கே கண்டெடுக்கக்கூடிய அனைத்துப் பொருட்களையும் அங்கேயே வைப்பதற்கும், carbon dating–ஐ விரைவுபடுத்தி, உடனடியாக அந்த நாகரிகத்தின் தொன்மையை நிலைநிறுத்துவதற்கும் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை நான் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டத்தில், கீழடியில் நடைபெறும் தொல்பொருள் ஆராய்ச்சியின் வாயிலாக தமிழர்களுடைய பண்பாடு, கலாச்சாரம் ஆகியவை சுமார் 2,000 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த வரலாற்றை நிரூபிக்கக்கூடிய பல்வேறு பொருட்கள் கிடைத்திருக்கின்றன. அதனடிப்படையிலேதான் தொல்பொருள் துறையினர் 2 ஏக்கர் நிலம் வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்தார்கள். உடனடியாக இந்த அரசு அதற்கு ஏற்பாடுகளைச் செய்து, 2 ஏக்கர் நிலம் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதுபோல், நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, அந்தப் பகுதி மக்களுடைய எண்ணங்களை மனதிலேகொண்டு, இந்த ஆண்டு கல்வித் துறையின் மூலமாக ரூ.1 கோடி நிதியை வழங்கி, அங்கே அருங்காட்சியகம் அமைப்பதற்கும், நம்முடைய நாகரிகத்தை நிலைநாட்டுவதற்கும் இந்த அரசு பல்வேறு பணிகளை ஆற்றிக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ளபடி, நம்முடைய பண்பாடுகளை, கலாச்சாரங்களைக் காக்கின்ற வகையில் இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்றும், அதற்குரிய அழுத்தத்தை மத்திய அரசுக்குத் தரும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

2017 ஜூலை 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், என்னவென்று சொல்லுங்கள்.

பிற்பகல் 12–05

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழடி குறித்தே ஒரு தகவலை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன். அகழாய்வுகளைப் பார்த்தோமென்றால், மொகஞ்சதாரோ, ஹரப்பா, அரிக்கைமேடு, ஆதிச்சநல்லூர், அழகன்குளம் போன்ற இடங்களில் இருந்த நாகரிகங்களைப் பற்றி தொல்பொருள் அகழாய்வாளர்கள் எழுதிய பல்வேறு கருத்துகள் மற்றும் பல்வேறு ஆராய்ச்சி நூல்கள் வந்துகொண்டிருக்கின்றன. இவற்றிற்கும் கீழடிக்கும் என்ன வித்தியாசம் என்று கேட்டால், அங்கெல்லாம் ஒரு கிராமத்தில், ஓரிடத்தில், தோண்டி அந்த இடத்திலிருந்து,கிடைத்தபொருட்களைமட்டும்எடுத்திருக்கிறார்கள். ஆனால், இது ஒரு நகர் நாகரிகம். ஒரு நகரே உள்ளே இருக்கிறது. 300 ஏக்கர் இடங்களில் இருக்கிறது. முதன் முதலாக ஆய்வாளர்கள் ஒரு நகர் நாகரிகத்தைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இரண்டாவது வித்தியாசம், மொகஞ்சதாரோ, ஹரப்பா போன்ற இடங்களில் எல்லாம்கூட மத சம்பந்தமான சில பொருட்கள் கிடைத்திருக்கின்றன. ஆனால் இங்கு அதுமாதிரி எதுவுமே கிடைக்கவில்லை. எனவே ஒரு நகர நாகரிகத்தை வைகைக் கரையிலேயே—மொகஞ்சதாரோவிற்கு முன்னாலே கூட இந்த நாகரிகம் இருந்திருப்பதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இது மிக முக்கியமானது. தமிழர்களுடைய நாகரிகத்தை வலுப்படுத்தக்கூடிய ஒரு மிகப் பெரிய ஆராய்ச்சி. நான் அரசைக் கேட்டுக்கொள்வது, இதற்கு முக்கியத்துவம் கொடுத்து, இன்னும் நிலங்களை எடுத்து இதை நாம் காப்பாற்ற வேண்டும். இது வரக்கூடாது என்பதற்காகவே பலர் கடிதங்கள் எழுதியுள்ளார்கள். Hindu பத்திரிகையில் ஆரிய நாகரிகம் வந்தது, ஆரிய நாகரிகத்திலிருந்து திராவிட நாகரிகம் வந்தது என்றெல்லாம் எழுதிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், இதை அண்ணாவின் பெயரால் அமைந்திருக்கிற இந்த இயக்கம், திராவிட இயக்கம் என்று சொல்கிற இந்தக் கட்சி,—நம்முடைய நாகரிகத்தை நிலைநாட்டுவதற்கு இதுதான் சரியான சான்று—இதற்கு வேண்டியவற்றை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அழுத்தமாகச் சொல்லியிருக்கிறார்கள். சிந்து சமவெளி நாகரிகத்துக்கு உட்பட்டிருக்கிற நம்முடைய திராவிட இயக்கத்தினுடைய நாகரிகத்தை எடுத்துக் காட்டுகின்ற வகையிலே இந்த நகரம் அமைந்திருக்கிறது என்பதை எடுத்துக் காட்டினார்கள். தொல்பொருள் ஆராய்ச்சியின் மூலமாகப் பல்வேறு பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்த நகரத்திலே ஏறத்தாழ ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட பொருட்கள் நம்முடைய தொல்பொருள் துறையின் சார்பாகத் தோண்டி எடுக்கப்பட்டிருக்கின்றன. அதற்காக என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமோ, அந்த நடவடிக்கைகளை இந்த அரசு உடனடியாக மேற்கொள்ளும். மத்திய அரசுக்குத் தேவையான அழுத்தத்தையும் இந்த அரசு கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(ஆ) தமிழகத்தில் உள்ள அனைத்து விவசாயிகளின் விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சித் துணைத் தலைவர், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அர. சக்கரபாணி, திரு. கு. பிச்சாண்டி, முனைவர் க. பொன்முடி, திரு. எ.வ. வேலு, திரு. கே.என். நேரு, திரு. தா.மோ. அன்பரசன், திரு. உ. மதிவாணன், திரு. ஓய். பிரகாஷ், திரு. க. அன்பழகன், திரு. மு.பெ. கிரி, திரு. ஐ.பி. செந்தில்குமார், திரு. துரை. சந்திரசேகரன், திரு. ஆர். காந்தி, திரு. டி.ஆர்.பி. ராஜா, திரு. கே.எஸ். மூர்த்தி மற்றும் திருமதி எஸ். விஜயதரணி ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.*

திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்திலுள்ள அனைத்து விவசாயிகளின் விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்த"*